036610 JD(NSS)

மே 2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of May 2022)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித எண்.12003/பக5(1)/2022-1, நாள் 18.05.2022**

23 MAY 2022

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

4 copies

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள். (இணைப்பு)
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35. (இணைப்பு)
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள். (இணைப்பு)

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி - 2011-12 ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பள்ளிக்கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட 1282 பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கான ஊதிய கொடுப்பாணை வழங்குதல் – குறித்து.

பார்வை 1. அரசாணை (நிலை) எண்.193, பள்ளிக் கல்வி [வ.செ.2]த் துறை, நாள் : 02.12.2011.

2. அரசாணை (1டி) எண்.265, பள்ளிக் கல்வி [பக5(1)]த் துறை, நாள் 23.07.2019.

3. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.000506/எல்/இ3/2022 நாள்: 10.05.2022.

-----

பார்வை 1-ல் காணும் அரசாணையில், அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் ஆண்டில் பள்ளிக்கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8-ஆம் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் தொடக்கக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1581 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3565 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6428 கூடுதல் ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. பார்வை 2ல் காணும் அரசாணையில், மேற்காணும் பணியிடங்களில் 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2019 முதல் 31.12.2021 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்காணும் தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை மேலும் ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள 1282 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை மேலும் ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள 1,282 பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான மே-2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

18/5/22

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக

3/6

18.5.22

**நகல்**

✓ பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6 (இணைப்பு)
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35. (இணைப்பு)
நிதி(கல்வி-II)த் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இவ்வலுவலக ந.க.எண். 000506/எல்/இ3/2022 நாள்:- 24.5.2022

(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

24.5.22

இணை இயக்குநர் (நா.ந.தி.),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை-600 006.

24/5/2022